# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.32/2023

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10 வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு பிப்ரவரி மாதம் 14 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : அனுசுயா | மதம் | : இந்து |
| க/பெ | : ராமசந்திரன் நாயுடு | ஜாதி | : -- |
| வயது | : 72 | கிராமம் | : ராஜபத்மாபுரம் |
| தொழில் | : இல்லத்தரசி | வட்டம் | : திருத்தணி |

**14.02.2025**

**வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

8. சின்ன கோவிந்தசாமி நாயுடு இதே சொத்து சம்பந்தமாக எங்கள் மீது வழக்கு தாக்கல் செய்தார் என்றால் ஆமாம். நான் என்ன படித்துள்ளேன் என்றால் 8 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு ஆங்கிலம் எழுதப்படிக்க தெரியுமா என்றால் தெரியாது. நான் என்ன மொழியில் கையெழுத்து செய்வேன் என்றால் ஆங்கிலத்தில் கையெழுத்து செய்வேன். என்னிடம் காட்டப்படும் அஞ்சல் ஒப்புதல் அட்டையில் உள்ள 18.08.2018 ம் தேதியிட்ட கையெழுத்து என்னுடையது என்றால் சரிதான். **(சாட்சி ஒப்புக்கொண்டதால் அஞ்சல் ஒப்புதல் அட்டை பி.வா.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பி.வா.சா.ஆ 1 உடன் எனக்கு வந்த அறிவிப்பு என்னிடம் காட்டப்படுவதுதான் என்றால் ஆமாம். **(சாட்சி ஒப்புக்கொண்டதால் 16.08.2018 ம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு பி.வா.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

9. பி.வா.சா.ஆ 2 வழக்கறிவிப்பிற்கு நான் அனுப்பிய பதில் அறிவிப்பு என்னிடம் காட்டப்படுவதுதான் என்றால் ஆமாம். **(சாட்சி ஒப்புக்கொண்டதால் 25.08.2018 ம் தேதியிட்ட பதில் அறிவிப்பு பி.வா.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 18.05.2018 ம் தேதியில் எனக்கு வந்த வழக்கறிவிப்புக்கு நான் பி.வா.சா.ஆ. 3 ல் உள்ள அதே வழக்கறிஞரை வைத்து நான் அனுப்பிய பதில் அறிவிப்பு என்னிடம் காட்டப்படுவதுதான் என்றால் அது என் கணவருக்குதான் தெரியும். 18.05.2018 ம்

தேதியே முதல் வழக்கறிவிப்பு எனக்கும் என் கணவருக்கும் மற்றும் வருவாய் துறையினருக்கும் வந்தது என்றால் எனக்கு அதை பற்றி தெரியாது. 18.05.2018 ம் தேதியிட்ட வழக்கறிவிப்பை மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை.

10. நான் உண்மை விவரங்களை மறைத்து நடந்த விஷயங்களை மறைத்து நான் ஒரு மனு கொடுத்து அதன் பேரில் சென்னை உயர் நீதிமன்றத்தில் வா.சா.ஆ 7 உத்தரவு பெற்றுள்ளேன் என்றால் அப்படியில்லை. நான் அளக்க பணம் கட்டினேன். அவர்கள் அளக்கவிடாமல் செய்தனர். எனவே உத்தரவு பெற்றேன். நான் பி.வா.சா.ஆ 2, பி.வா.சா.ஆ 3 வழக்கறிஞர் அறிவிப்புகள் வந்த பின்புதான் 2 வருடம் கழித்து உண்மையை மறைத்து சென்னை உயர் நீதிமன்றத்தில் வா.சா.ஆ 7 உத்தரவு பெற்றுள்ளேன் என்றால் இல்லை. எனக்கு தமிழ் படிக்க தெரியும் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் அறிவிப்பு வட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்து வந்த அறிவிப்புதான் என்றால் ஆமாம். **(சாட்சி ஒப்புக்கொண்டதால் 22.05.2018 ம் தேதியிட்ட அறிவிப்பு பி.வா.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

11. வட்டாட்சியர் விசாரணை, வழக்கறிஞர் அறிவிப்பு ஆகிய விவரங்களை சென்னை உயர்நீதிமன்ற மனுவில் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளோம். 18.05.2018 தேதியிட்ட அறிவிப்புக்கு நாங்கள் விவரம் தெரிந்துகொண்டே என் மகனை வைத்து தவறான பதிலை அனுப்பியுள்ளோம் என்றால் பொய். பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் உண்மையான முழு விவரங்களை தெரிவித்த பின்பும் நான் பிராதில் கூறியுள்ள தீர்ப்பாணையை பற்றி சீர்த்திருத்தம் செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்து 1967 லேயே அ.வ.எண்.114/1976 ல் பிரதிவாதியின் தகப்பனார் சின்ன கோவிந்தசாமிக்கு ஒதுக்கப்பட்ட சொத்து என்றாலும் எனக்கு வழக்கு சொத்தில் எந்த பாத்தியமும் இல்லை என்றாலும் சரியல்ல.

12. இந்த விவரங்களைதான் 2018 ல் இருந்து பிரதிவாதி வழக்கறிவிப்பு அனுப்பியுள்ளார் என்றாலும் அதன் பின்பும் நான் இந்த வழக்கை தவறாக தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 1 என் கணவர் பெயரில் உள்ள பட்டா என்றால் ஆமாம். வா.சா.ஆ 1 பட்டாவில் குறிப்பிட்டுள்ள அளவான 843 சதுரமீட்டர் சரியான அளவா என்றால் சரிதான். 843 சதுரமீட்டரும்

பிரதிவாதியின் தகப்பனாருக்கு தீர்ப்பாணை மூலம் கிடைக்கப்பெற்ற சொத்து என்றாலும் அதில் பிரதிவாதிக்கு மட்டும்தான் உரிமையுள்ளது என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ 1ல் உள்ள அளவிற்கும் பிராதில் உள்ள சொத்தின் அளவிற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் அது தவறாக உள்ளது என்றாலும் சரியல்ல.

13. 1967 முதல் 2018 வரை உரிமை குறித்து பிரச்சனை இருந்து வரும் நிலையில் நான் A அட்டவணை குறித்து உரிமை விளம்புகை கேட்காமல் பி அட்டவணை சொத்திற்கு மட்டும் உரிமை விளம்புகை கேட்டு தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. எங்களது உரிமையே பிரச்சனையில் உள்ள நிலையில் A அட்டவணை குறித்து உரிமை விளம்புகை கேட்காமல் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு சட்டப்படி நிலைநிற்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. 1967 லேயே வழக்கு தீர்ப்பான பின்பு நாங்கள் அந்த தீர்ப்பாணையை மீறியதால் எங்கள் மீது நீதிமன்ற அவமதிப்புக்காக நிறைவேறுதல் மனு தாக்கல் செய்யப்பட்டது என்றால் நிறைவேறுதல் மனு தாக்கல் செய்யப்பட்டது.

14. எனது வழக்கே பொய்யான வழக்கு என்றாலும் முந்தைய தீர்ப்பை மறைத்து நீதிமன்றத்தை ஏமாற்ற இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு A, B அட்டவணை சொத்துக்களில் பிரதிவாதிக்குதான் சொந்தம் உள்ளது என்றாலும் எங்களுக்கு உரிமையே இல்லை என்றாலும் சரியல்ல. வழக்கில் நான் உண்மையான முந்தைய வழக்கை மறைத்து தவறான வழக்குமூலத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. நான் வழக்கில் சொத்தை தவறாக மதிப்பீடு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என் வழக்கே செல்லத்தக்கது அல்ல என்றாலும் தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)